புலமைவளரி 5


இலக்கைநோக்கி

நேரம்:- 1.00மணித்தியாலம் வளரி - 028 புள்ளி:-

பெயர்:- ..... வினாத்தாள் -I ஆசிரியர்:- ஐ.சிவசங்கரலிங்கம்.


❖ 01ஆம் 02ஆம் வினாக்களில் சற்று வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

01)



1. 2. 3.


02)



1. 2. 3.


❖ தரப்பட்டுள்ள உருக்களை அம்புக்குறி வழியே பார்க்கும் போது தெரியும் வடிவம் எது?

03)



1. 2. 3.

04)



1. 2. 3.


05) பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்ட வாக்கியத்தை தெரிவு செய்க.

1. பனியாட்கள் வேலை செய்தனர்
2. பணியாட்கள் வேளை செய்தனர்
3. பணியாட்கள் வேலை செய்தனர்




06) கோலங்களுக்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண் யாது?

987, 876, 765, ..., 543

1. 654 2. 645 3. 678

07) 

இவ் உருவைக் கொண்ட அட்டையை அம்புக்குறி காட்டும் திசையில் செங்கோணத்தில் சுழற்றினால் தோன்றும் சரியான முறை யாது?

1. 
2. 
3. 

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 3 - O/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 3 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

08) அருண் தனது பிறந்த தினம் நாளை மறுதினம் என்று நேற்று முன்தினம் புதன்கிழமை 7ம் திகதி கூறினான் எனின், அருண் பிறந்த தினம் கொண்டாடப்படும் திகதி, கிழமை?

1. 11ம்திகதி, ஞாயிறு
2. 9ம்திகதி, வெள்ளி
3. 10ம்திகதி, சனி

09) I – XX வரை உரோம எண்கள் எழுதும் போது X எழுதப்படும் தடவைகள் எத்தனை?

1. 13
2. 12
3. 14

10) மூன்றுகால் மேசை ஒன்றைச் சுற்றி நான்கு கால் கதிரைகள் சில உள்ளன. அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை 27 எனின் அங்குள்ள நான்கு கால் கதிரைகள் எத்தனை?

1. 4
2. 6
3. 9

11) 2021 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களின் நாட்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 90
2. 89
3. 91

12) அருகில் உள்ள வரிப்படம் தரம் 5 மாணவர்கள் விரும்பும் பாடங்கள் பற்றியதாகும்.



சிங்களப் பாடத்தை 6 மாணவர்கள் விரும்புகின்றனர். எனின் தமிழ் பாடத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?


1. 12
2. 14
3. 18

13) பொறியொன்றில் சிவப்பு நிற மின்குமிழ் மூன்று நிமிடங்களுக்கு ஒருமுறை ஒளிரும். நீல நிற மின்குமிழ் நான்கு நிமிடங்களுக்கு ஒரு முறை ஒளிரும். இரு மின்குமிழ்களும் காலை 7.00 மணிக்கு ஒன்றாக ஒளிர்ந்தது எனின் மீண்டும் இரண்டு மின்குமிழ்களும் ஒன்றாக ஒளிரும் நேரம்?


1. 7.15
2. 7.12
3. 7.18

❖ **கீழே தரப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்களைத் தெரிவு செய்க.**


14)



1. 36




2. 54




3. 34


15)



1. 20



2. 30



3. 25

16) 200 தொடக்கம் 210 வரையுள்ள எண்களை எழுதும்போது 2 எழுதப்படும் தடவைகள் எத்தனை?


1. 10 2. 12 3. 11

17) பிழையான கோவையைத் தெரிக.

1. 8X8=64 2. 6X6+6=42 3. 55-55X10=10

18) உருவில் உள்ள வட்டங்கள் ஒன்றையொன்று ஒத்தவை B யில் இருந்து C வரையான தூரம் 7cm எனின் A யில் இருந்து D வரையிலான தூரம் யாது?

1. 17 2. 14 3. 21



19) பையொன்றில் 4 மஞ்சள் நிற மாபிள்களும் 6 சிவப்பு நிற மாபிள்களும் 5 பச்சை நிற மாபிள்களும் இருக்கின்றன. மோகன் எழுமாற்றாக ஒவ்வொரு மாபிள்களாக் எடுக்கின்றான். அவனுக்கு ஒரு மஞ்சள் மாபிள் நிச்சயமாக கிடைக்க வேண்டும் எனின் அவன் ஆகக் குறைந்தது எத்தனை தடவை எடுத்தல் வேண்டும்?

1. 12தடவை 2. 11தடவை 3. 13தடவை




20) ஒரு பேருந்தில் சென்ற மாணவன் தனது பயணச்சீட்டுக்காக நடத்துநரிடம் ரூபாய் 10.00 ஐ வழங்கிய போது நடத்துநர் அந்த மாணவனிடம் மேலும் ரூபாய் 5.00 ஐ பெற்று ரூபாய் 2.00 ஐ மீதியாக கொடுத்தார். மாணவனின் பேருந்துக் கட்டணம் யாது?

1. ரூபாய் 13.00 2. ரூபாய் 15.00 3. ரூபாய் 17.00

21) இரண்டு தட்டுத் தராசில் ஒரு தட்டில் ஒரு கிலோகிராம் பஞ்சும் இன்னொரு தட்டில் ஒரு கிலோகிராம் இரும்பும் இருந்தது எனின் இவற்றுள் பாரம் கூடியது பொருள் எது?

1. இரும்பு பாரம் கூடியது.
2. பஞ்சு பாரம் கூடியது.
3. இரு நிறைகளும் சமனானது.

22)  இவ்வுருவிற்கு சமமாக நிறந்தீட்டப்பட்ட உரு எது?

1. 
2. 
3. 

23) ஒரு கோழிப் பண்ணையில் உள்ள கோழியின் கால்களினதும் அதன் அலகுகளினதும் எண்ணிக்கை 108 எனின் அங்குள்ள கோழிகள் எத்தனை?

1. 36 2. 46 3. 26


24) "புளகாங்கிதம்" எனும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கக் கூடிய ஒரு சொல்?

1. பூங்கா 2. தங்கம் 3. காம்பு

25) 1948ஆம் ஆண்டு இருபதாம் நூற்றாண்டின் எத்தனையாம் தசாப்தம்?

1. 9 ஆம் தசாப்தம் 2. 5 ஆம் தசாப்தம் 3. 4 ஆம் தசாப்தம்

❖ **சதுரமுகியின் ஆறு பக்கங்கள் ஆறு வெவ்வேறு நிறங்களால் நிழற்றப்பட்டுள்ளன. இச் சதுரமுகியின் மூன்று உருக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**



26) இச் சதுரமுகியில் நீல நிறத்திற்கு எதிரே உள்ள பக்கத்தின் நிறம் யாது?
1. ஊதா 2. கறுப்பு 3. சிவப்பு

27) இச் சதுரமுகியில் பச்சை நிறத்திற்கு எதிரே உள்ள பக்கத்தின் நிறம் யாது?
1. கறுப்பு 2. ஊதா 3. மஞ்சள்

28) 300 இன் கால்வாசியின் $\frac{1}{3}$ உடன் ஐந்தைக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?
1. 105 2. 75 3. 30

29) ஒத்த சோடியைக் கொண்ட உருவைத் தெரிவு செய்க.




1. BC / AE
2. AD / CE
3. BD / AC

30) சரியான விடையினைத் தெரிவு செய்க.
"வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்ற பழமொழியின் கருத்து யாது?
1. விடாமுயற்சி 2. திறமையில் நம்பிக்கை 3. ஒற்றுமை

31) "கண்திறத்தல்" என்ற மரபுத்தொடரின் பொருள் யாது?
1. அறிவுண்டாதல் 2. கண்விழித்தல் 3. நித்திரை செய்தல்

32) சதுர வடிவான தோட்டம் ஒன்றின் நீளம் 15 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித் துண்டுகள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?
1. 24 2. 20 3. 16

33) உருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கையும், செவ்வகங்களின் எண்ணிக்கையும் முறையே
1. 3,3 2. 3,5 3. 2,5



34) 3m நீளமான சதுரவடிவ சுவரிற்கு தீந்தை பூச 3l தீந்தை தேவை எனின் 6m நீளமான சதுரவடிவ சுவரிற்குப் பூசத் தேவையான தீந்தையின் அளவு யாது?

1. 6 லீற்றர்
2. 12 லீற்றர்
3. 15 லீற்றர்

35) கடிதமொன்றின் முக்கிய பகுதிகளை ஒழுங்கு முறையாகக் கொண்ட விடை

1. முகவரி, விளிப்பு, உடல், முடிப்பு, ஒப்பம்
2. ஒப்பம், முடிப்பு, உடல், விளிப்பு, முகவரி
3. முகவரி, விளிப்பு, முடிப்பு, உடல், ஒப்பம்

36) இக் கடிகாரம் இன்னும் எவ்வளவு நேரத்தின் பின் செங்கோணமாகும்.



1. 180 நிமிடம்
2. 120 நிமிடம்
3. 15 நிமிடம்

❖ **கீழே தொடர்பை அவதானித்து 34-36ம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**

 +  = 150g

 -  = 50g

37)  இன் பெறுமதி யாது?

1. 100g
2. 50g
3. 200g




38)  +  +  +  என்பது குறிப்பது

1. 300g
2. 200g
3. 350g

39)  +  +  -  என்பது குறிப்பது

1. 200g
2. 50g
3. 250g

40) உயிருள்ளவை, மாமரம், அணில் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டும் வரிப்படம் எது?

1. 
2. 
3. 

(40X2.5=100புள்ளிகள்)

புலமைவளரி 5

இலக்கைநோக்கி

நேரம்:- 1.15 மணித்தியாலம் **வளரி– 028** **புள்ளி:-**

பெயர்:- …….. **வினாத்தாள் - II** **ஆசிரியர்:- ஐ.சிவசங்கரலிங்கம்.**

01) பின்வரும் பந்தியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பந்தியிலிருந்து விடை எழுதுக.

கொழுந்துகளில் படிந்திருந்த பனித்துளியானது வெள்ளைத் துணி விரித்தாற் போல் தெரிந்தது. ஆதவனும் தனது ஒளிக்கதிரைப் பரப்பிக் கொண்டு மெல்ல மெல்ல பவனி வந்தான். அக்கம் பக்கம் உள்ளவர்கள் எல்லோரும் கண் விழித்து எழுந்தனர். மளமளவென எல்லோரும் வேலைக்குச் செல்ல ஆயத்தமாகினர்.

1. மடக்கேறும் விசிறியும் இடம்பெற்றுள்ள சொல்லை எழுதுக. ……
2. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத்தொடரை எழுதுக. ……..
3. இங்கு வந்துள்ள மரபுத்தொடரின் கருத்தினை எழுதுக. ……..
4. இப் பந்தியில் குறிப்பிடப்படும் உயர்திணை படர்க்கை பன்மை இறந்தகால வினைச்சொல் யாது? ……
5. ஒளிக்கதிர் என்பதைப் பிரித்து எழுதுக. ……..
6. இப் பந்தியில் குறிப்பிடப்படும் அடைமொழிச்சொல் ஒன்றை எழுதுக. ……..

(6x1=6புள்ளிகள்)

02) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

1. நாம் ஒற்றுமையாக …… (வாழ்வேன் / வாழ்வோம்)
2. காட்டிற்குள் மான்கூட்டம் ஓடித் …….. (திரிந்தன / திரிந்தது)
3. சபரி ஒவ்வொரு …… (பழங்களாக / பழமாக) சுவைத்துப் பார்த்தான்.
4. மோகன் ……... (எழுதப்பட்ட / எழுதிய) நூலை எல்லோரும் படித்தார்கள்.

(4x1=4புள்ளிகள்)

03) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. தொலைக்காட்சியைப் போன்ற …… இதற்கு உண்டு.
   (திறையமைப்பு / திரையமைப்பு)
2. தனது தாயின் ……..…… னாலேயே யாவும் நடந்தன.
   (சூழ்ச்சி / சூல்ச்சி) (2x1=2புள்ளிகள்)

04) பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

1. குழந்தாய் நீ யார் என்று அன்போடு முதியவர் கேட்டார்
2. பெரியவரே உங்களுக்கு என்ன வேண்டும் (2x1=2புள்ளிகள்)

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

05) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

1. ஏட்டிக்குப் / நடந்து / போட்டியாக / நாம் / கொள்ளக்கூடாது / பெரியவர்களுடன்

   .....

2. இரு / அந்த / நிழல் / பக்கங்களிலும் / வீதியின் / மரங்கள் / நின்றன

   .....

(2x1=2புள்ளிகள்)

06) மிகச் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1.	சீயாக்காய்	சிகைக்காய்	சியாக்காய்
2.	கணனி	கணணி	கணினி

(2x1=2புள்ளிகள்)

07) பின்வரும் பிராணிகளின் இளமைப்பெயர்களை எழுதுக.

1. மீன் - ..... 2. பூனை - .....

(2x1=2புள்ளிகள்)

08) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. ஒரு நூலுக்கு நூலாசிரியர் அல்லாத பிறர் வழங்கும் புகழுரை .....
2. ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் ஒன்றாகப் படித்தவர் .....

(2x1=2புள்ளிகள்)

09) பின்வரும் கருத்துக்குரிய மரபுத்தொடரை எழுதுக.

1. தோற்றப்பொலிவு - ..... 2. அறிவுண்டாதல் - .....

(2x1=2புள்ளிகள்)

10) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. How ..... (is , are) you?
2. I am coming to .....(a , the) class room. (2x1=2புள்ளிகள்)

11) பின்வரும் படங்கள் குறிக்கும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

1.  .....

2.  .....

(2x1=2புள்ளிகள்)

12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1. What are those? .....
2. Can you help me? ..... (2x1=2புள்ளிகள்)

13) **பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

1. மெய மகே பு(ட்)டுவ - .....
2. மட்ட சருங்கலய ஹதலா தென்ன - .....

(2x1=2புள்ளிகள்)

14) **பின்வரும் படங்களின் கருத்தை சிங்கள உச்சரிப்பில் எழுதுக.**

1.  .....

2.  .....

(2x1=2புள்ளிகள்)

15) பின்வரும் சம்பவத்தைத் தொடர்ந்து நடைபெறக்கூடிய நிகழ்வுகள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருப்பதுடன் எழுவாய், பயனிலை தொடர்புகளும் சரியாக அமைதல் வேண்டும்.

கிழக்கு வானில் கதிரவன் தனது பொற்கிரகணங்களைப் பரப்பிக் கொண்டு எழுந்த போது.....

1. .....
   .....
2. .....
   .....
3. .....
   .....

(3x2=6புள்ளிகள்)

❖ **பின்வரும் வினாக்களுக்கான விடைகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

16) ஆறாயிரத்து ஐம்பது என்பதை இலக்கங்களில் எழுதுக. .....

17) 1 லீற்றர் 750 மில்லிலீற்றர் மென்பானம் ஏழு பிள்ளைகளுக்கிடையே சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டால் ஒரு பிள்ளை அருந்தும் மென்பானத்தின் அளவு .....

18) | 2 | 7 | 5 | தரப்பட்ட இலக்கங்களைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணின் எண் பெயரை எழுதுக. .....

19)  தரப்பட்ட பென்சிலின் நீளம் யாது? .....

20) பேனா ஒன்றின் விலை ரூபா.22.00 ஆகும். 5 பேனாக்களை விலைக்கு வாங்கி ரூபா.500.00 காசுத்தாளை வியாபாரிக்குக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

.....

21) இவ்வுருவில் 2m 2m கொண்ட எத்தனை சதுரங்கள் வெட்டி எடுக்கலாம்? 18m 6m

22) 372 தேங்காய்களில் 168ஐ விற்ற பின் மிகுதியை சமனான நான்கு குவியல்களாக ஆக்கப்பட்டது. ஒரு குவியலில் உள்ள தேங்காய்கள் எத்தனை? .....

23) 1kg அரிசியின் விலை ரூபா 70.00 ஆகும். அதன்படி 3kg 200g அரிசியின் விலை யாது? .....

24) பிற்பகல் 2.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கீதா 45 நிமிடத்தில் நூல் நிலையத்திற்கு சென்றாள். அவள் அங்கு 40 நிமிடங்கள் இருந்தாள். கீதா நூல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டாள்? .....

25) தரப்பட்ட உருவில் 0.75 பங்கை நிழற்றுக.

26) கமலின் நிறை 18kg 300g ஆகும். அவனது தாயின் நிறை கமலின் நிறையின் இரண்டு மடங்கிலும் 6kg குறைவு. தந்தையின் நிறை தாயின் நிறையை விட 10kg 200g அதிகம். தந்தையின் நிறை யாது? .....

27) குமரன் காலை 9.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு 4 மணித்தியாலம் 35 நிமிடங்களில் மீண்டும் வீட்டை வந்தடைந்தான். எனின் குமரன் வீட்டை வந்தடைந்த நேரத்தை நியம நேரமாக எழுதுக. .....

28) தரப்பட்டவற்றில் $\frac{2}{5}$ சமவலுப்பின்னத்தைத் தெரிவு செய்து எழுதுக. $\frac{2}{10}, \frac{3}{10}, \frac{4}{10}, \frac{3}{8}$

.....

29) தாங்கி ஒன்றில் உள்ள நீரானது மூன்று கட்டங்களாக வெளியேற்றப்பட்ட பின்னர் தாங்கியில் தற்போது 3000l நீர் காணப்படுகிறது.

முதலாவது முறையில் வெளியேற்றப்பட்ட நீரின் அளவு - 500l ஆகும்.
இரண்டாவது முறை வெளியேற்றப்பட்ட நீரின் அளவு முதலாவது முறையின் இருமடங்காகும்.
மூன்றாவது முறை வெளியேற்றப்பட்ட நீரின் அளவு முதல் இரு முறைகளினதும் கூட்டுத்தொகைக்கு சமனாகும்.

எனின் தாங்கியின் தொடக்கத்தில் இருந்த நீரின் கனவளவு யாது? .....

30) கீழே பூரணமற்றுக் காணப்படும் சிட்டையின் வெற்றிடங்களை நிரப்புக.

பொருள்	எண்ணிக்கை	ஒன்றின் விலை		பணம்	
		ரூபா	சதம்	ரூபா	சதம்
பேனா	4	9	50	.....	.....
பென்சில்	5	.....	.....	50	00
அழிறப்பர்	.....	5	00	25	00
மொத்தம்				.....	.....

(15x2=30புள்ளிகள்)

❖ **31 தொடக்கம் 60 வரையான வினாக்களுக்கு சரியான விடை தருக.**

31)  உருவில் உள்ள உபகரணத்தின் பெயர்?
1. சாவணம் 2. துறப்பணம் 3. இடுக்கி

32) கிராமங்களில் எரிபுழு என அழைக்கப்படுவது?
1. மண்புழு 2. மயிர்க்கொட்டி 3. அந்துப்பூச்சி

33)  இக் குறியீடு உணர்த்துவது?
1. சிறுவர் கடவை 2. வாகனம் நிறுத்துமிடம் 3. புகையிரதக் கடவை

34) நாம் விரும்பும் செயல்களின் ஒன்று?
1. நன்றாகப் படித்தல் 2. கடுமையாகப் பேசுவது 3. என்னைக் கண்டிப்பது

35) வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்கறிகள்?
1. சோளம், பப்பாசி, புடோல், சிறகவரை
2. வெண்டி, போஞ்சி, பயற்றை, அவரை
3. பப்பாசி, புடோல், வெள்ளரிக்காய், பூசணி

36) எடம்ஸ் பீக் என்றழைக்கப்படும் இடம் எது?
1. சீகிரியா 2. ஸ்ரீபாத 3. பீதுருதாலகால

37) பின்வரும் பிராணிகளில் இருளை விரும்பாத பிராணி?
1.  2.  3. 

38) 

இக் காசுத்தாளில் கட்டமிட்டு காட்டப்பட்டுள்ள இலக்கங்களால் உணர்த்தப்படும் விடயம் எது?
1. இரகசிய இலக்கம் 2. தொடரிலக்கம் 3. உற்பத்தி இலக்கம்

39) ஒலிம்பிக் கொடியில் காணப்படும் ஐந்து வளையங்களும் குறித்து நிற்பது?
1. சமுத்திரங்களை 2. நாடுகளை 3. கண்டங்களை

40) தனி ஒருவரால் பயன்படுத்தப்படாத பொருள்?

1. 
2. 
3. 

41) நவீன கணினி உருவாக்கத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்

1. லூயிபாஸ்ட்டர்
2. சார்ள்ஸ் பபீஜ்
3. பிளைஸ்பஸ்கால்

42) மண்ணரிப்பைத் தடுக்கும் முறைகளில் அடங்காதது

1. கல்வேலி அமைத்தல்
2. மூடுபயிர் அமைத்தல்
3. மண்ணைக் கொத்திப் பண்படுத்தல்

43) நிலக்கடலையில் அதிகம் அடங்கியுள்ள போசணைப்பதார்த்தம்

1. புரதம்
2. மாப்பொருள்
3. கொழுப்பு

44) தற்பொழுது பிரதான வீதிகளில் மஞ்சட் கோட்டுக்குப் பதிலாக பயன்படுத்தும் நிறம்

1. வெள்ளை
2. சிவப்பு
3. மஞ்சள்

45) இலங்கையில் கடற்கரையை அண்மித்துள்ள நகரம் அல்லாதது?

1. காலி
2. மாத்தளை
3. மாத்தறை




46) இயற்கை நிகழ்வு அல்லாதது?

1. சுனாமி
2. காடழிப்பு
3. வெள்ளம்

47) மகாசேனன் கட்டிய குளம் எது?

1. அபயவாவி
2. மின்னேரியாக்குளம்
3. யோதவாவி

48) ஒளிரக்கூடிய மின்சுற்று எது இரு உலர் மின்கலங்கள் மூலம் மின்குமிழ் பின்வருமாறு தொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொடுக்கப்படும் போது மின்குமிழ் ஒளிரும் உரு எது?

1. 
2. 
3. 

49) பேருந்து ஒன்றிற்கு உள்ள சக்கரங்களின் எண்ணிக்கை யாது?

1. 4
2. 6
3. 8

50) இலங்கையில் ஆதிவாசிகள் அதிகம் வசிக்கும் இடம்

1. விந்தனை
2. தம்பானை
3. திம்புலாகல

51) நீர்ச் சூழலில் வளரும் தாவரங்களில் ஒன்று

1. கிண்ணை
2. கொக்கோ
3. அல்லி

52) மலைநாட்டுப் பகுதிகளில் வளரும் தாவரங்ளில் ஒன்று
1. நாகதாளி 2. பன்னம் 3. வலிசினேரியா

53) சிறிய பூச்சிகளைப் பிடித்து உண்ணும் பிராணி
1. வெட்டுக்கிளி 2. தும்பி 3. கழுகு

54) பிராணிகளின் குருதிகளை உணவாகக் கொள்ளும் விலங்கு
1. தேள் 2. நாய் 3. அட்டை

55) மிளகாய் அரைப்பதற்கு முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவி
1. அம்மி 2. ஆட்டுக்கல் 3. துருவளை

56) பிளாத்திக்கினாலும் இரும்பினாலும் ஆக்கப்படும் பொருள்
1. கத்தரிக்கோல் 2. மண்வெட்டி 3. அரிவாள்

57) மின் உற்பத்திக்காக பயன்படாத வலுச்சக்தி
1. நீர் 2. நிலக்கரி 3. விறகு

58) அயடீன் அதிகம் உள்ள உணவு
1. கடல்மீன் 2. வற்றாளை 3. மரவள்ளி

59) இந்த நிறுவனத்தின் மூலம் பெறக்கூடிய சேவை அல்லாதது?
1. காசோலையை வைப்பிலிடல்
2. பணத்தை சேமித்தல்
3. காசுக்கட்டளை அனுப்புதல்

60) இலங்கையில் அதிகளவில் மண்சரிவு ஏற்படும் பிரதேசங்களில் ஒன்று
1. இரத்தினபுரி 2. புத்தளம் 3. அநுராதபுரம்

(30x1=30புள்ளிகள்)